

# வேளாண்மையில் நிகழ் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகள் -குழு கலந்தாய்வு

**நாள் : 31.07.2013 (புதன்கிழமை)**

## தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | அமர்வுகளின் விபரம் | 2 |
| 3. | விழுப்புரம் மாவட்ட வேளாண்மை மற்றும் வேளாண் சார் தொழில்களின் பலம், பலவீனம், வாய்ப்பு, சவால்கள் பற்றிய கலந்தாய்வு | 7 |

இணைப்பு-1

# விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண்மையில் நிகழ் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகள்- குழு கலந்தாய்வு

## 1. அறிமுகம்

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் வேளாண்மையில், குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளது. வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள், கால்நடைகள், பலதரப்பட்ட பறவையினங்கள் மற்றும் மீன் உற்பத்திக்கு உகந்த தட்பவெப்ப மண்டலங்கள், சூழல்கள் அமைந்திருப்பதாலும், பெருநகரங்களுக்கு அருகில் அமைந்திருப்பதாலும் வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருக்கும் உழவர்கள் இம்மாவட்டத்தில் அதிகம். அண்மைக் காலத்தில், நவீன தொழில்நுட்பங்கள் வேளாண்மையில் பரந்த அளவில் உழவர் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. இவை, விளை பொருள் உற்பத்தியினை அதிகரிக்கவும், பண்ணையின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் பெரிதும் காரணமாக உள்ளன. இக்காலகட்டத்தில், உழவர்கள் சந்திக்கின்ற இடர்பாடுகளும் அவற்றிற்கு தீர்வாக அமையக்கூடிய பல்வகை பரிந்துரைகளைப் பற்றிய விபரங்கள் அடையாளம் காணப்பட வேண்டியுள்ளது. தமிழகத்தின் மிகப்பெரிய பரப்பளவை உள்ளடக்கிய இம்மாவட்டத்தின் உழவர்கள் சந்திக்கின்ற இடர்பாடுகளை பட்டியலிட்டு, தீர்வுகளை எடுத்துரைக்க, விழுப்புரம் மாவட்டத்தின் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 31.07.2013 அன்று மேற்கூறிய தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. விரிவான நிகழ்ச்சி நிரல் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. துவக்க நிகழ்ச்சி | : | முனைவர். க. நடராஜன், தொழில்நுட்ப வல்லுநர் (விதை நுட்பவியல்) பங்கேற்பாளர்களை வரவேற்றார். மாவட்டத்தின் இணை வேளாண்மை இயக்குநர், திரு.ஆ.இரத்தினசபாபதி அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். முனைவர். இரா. வைத்தியநாதன், பேராசிரியர் மற்றும் தலைவர், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் முன்னிலை வகித்தார், நிகழ்ச்சியில் திரு.என்.விக்ரமன், உதவிப் பொது மேலாளர் (மா.வ), நபார்டு வங்கி, விழுப்புரம், திரு.கே.இரவீந்திரன், வேளாண்மை உதவி இயக்குநர், வல்லம் ஒன்றியம், திரு.கென்னடி ஜெபக்குமார், வேளாண்மை உதவி இயக்குநர், மரக்காணம் ஒன்றியம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். முனைவர். ந.சாத்தையா, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம் நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார். முனைவர். மு.ரேணுகா தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை) நன்றியுரை ஆற்றினார். |
| பரிமாறப்பட்ட கருத்துகள் | : | 1) மாவட்டத்தில் பல திட்டங்கள் செயல்படத்தப்படுகின்றன. திட்டத்தின் தாக்கம் பற்றிய கருத்துக்களை உழவர்கள் |

எடுத்துரைக்க வேண்டும். இதன் மூலம் புதிய பல கொள்கைகள் உருவாக்கம் செய்ய வாய்ப்பு ஏற்படும். (வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம்)

2) தற்போதைய காலத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் நம்பிக்கைதான் வழிகாட்டி, வேளாண் பெருமக்களுக்கும் இது சாலப் பொருந்தும், வேளாண் பல்கலைக்கழக வெளியீடுகள் மற்றும் தொழில் நுட்பங்கள் நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்துள்ளன (பேராசிரியர் மற்றும் தலைவர், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்)

3) விழுப்புரம் மாவட்ட உழவர்கள் தொழில்நுட்பங்களைக் கையாளும் பொழுது அதனை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும். உற்பத்தியில் ஏற்படும் இடைவெளியினைக் குறைக்க இதுவே முக்கிய காரணமாக அமையும். (வேளாண்மை உதவி இயக்குநர், வல்லம்)

4) தொழில் முனைவோருக்கு வேளாண்மையில் வாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதனைச் செயல்படுத்த உழவர்கள் மற்றும் ஊரக இளைஞர்கள் தகுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்

( உதவிப் பொது மேலாளர், நபார்டு வங்கி, விழுப்புரம்)

5) உழவர்களுக்கு பல்துறைகளும் ஒன்றாக இணைந்து அரசுத் திட்டங்களை செயல்படுத்துகின்றன. அதன் விளைவுகள் நல் முறையில் துல்லிய பண்ணையம், திருந்திய நெல் சாகுபடி போன்ற திட்டங்களில் வெளிப்பட்டுள்ளன. எனவே, உழவர்கள் நம்பிக்கையுடன் நடப்பு நிதியாண்டுத் திட்டமான ஒருங்கிணைந்த பண்ணையத்தில் ஈடுபடவேண்டும் (வேளாண்மை உதவி இயக்குநர், மரக்காணம்).

6) தோட்டக்கலைத்துறையில் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் உழவர்கள் அதிக அளவில் பங்கு பெற்று பயன்பெற வேண்டும் (தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ), வானூர்).

7) நமது மாவட்டத்தின் உழவர்களின் கருத்துக்கள் பல்வேறு பணிமனைகளில் விவாதிக்கப்பட்டு உரிய வகையில் திட்டங்கள்

தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய முயற்சி அதன் தொடர்ச்சியாகும். உழவர்கள் சந்திக்கின்ற உற்பத்தி முதல் சந்தை வரை உள்ள சிறிய மற்றும் பெரிய இடர்பாடுகள் பட்டியலிடப்பட வேண்டும். இது தரவரிசைப்படுத்தப்பட்டு அதற்குண்டான தீர்வுகள் இனங்காணப்பட வேண்டும் (பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்).

துவக்க நிகழ்ச்சியின் இறுதியில், வேளாண்மை அறிவியல் நிலையம், பேராசிரியர் மற்றும் தலைவர் தொழில் நுட்ப அமர்வுகளைப் பற்றிய விபரங்களை எடுத்துரைத்தார்.

**2. அமர்வுகளின் விபரம்**

**தொழில்நுட்ப அமர்வு -1 : பங்கேற்பு உழவர்கள் விபரங்கள் சேகரிப்பு**

மாவட்டத்தின் பல்வேறு ஒன்றியங்களில் இருந்து உழவர்கள் இந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தனர். பல்வேறு பட்டறைகள், களப்பணிகளில் ஆர்வமுடன் பங்கு பெற்ற 54 உழவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர், அவர்களைப் பற்றிய விபரங்கள் ஐந்து குழுக்களில் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

**தொழில்நுட்ப அமர்வு -2 : விழுப்புரம் மாவட்ட வேளாண்மை மற்றும் வேளாண் சார் தொழில்களின் பலம், பலவீனம் வாய்ப்பு, சவால்கள் பற்றிய கலந்தாய்வு**

இந்நிகழ்ச்சியில் மாவட்டத்தின் 54 உழவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் உழவர் பிரதநிதி நியமிக்கப்பட்டார். நிகழ்ச்சிகளை வழிநடத்திச் செல்ல ஒவ்வொரு குழுவிற்கும் விஞ்ஞானிகள் உறுதுணையாக இருந்தனர், பேராசிரியர் மற்றம் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், அமர்வில் கருத்துக்கள் எவ்வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதனை எடுத்துரைத்தார். ஐந்து குழு உறுப்பினர்களும் இந்நிகழ்ச்சியின் முடிவில் பட்டியலிடப்பட்ட தகவல்களை வழங்கினர். அந்தந்த குழுவின் உழவர் பிரதிநிதிகள் கருத்துக்களை அனைவர் மத்தியிலும் எடுத்துரைத்தனர். பெற்ற தகவல்கள் அனைத்தும் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்பட்டது. இவற்றின் விபரங்கள் கலந்தாய்வு தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன.

**தொழில்நுட்ப அமர்வு -3 : வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு உள்ள தீர்வுகளையும் வாய்ப்புகளையும் அடையாளம் கண்டு**

**பரிந்துரைகளை அளித்தல்**

இந்நிகழ்ச்சியில் உழவர்கள் மீண்டும் ஐந்து குழுக்களாகப் பிரிந்து முதலில் பிரச்சினைகளை முக்கியத்துவ அடிப்படையில் பட்டியலிட்டனர். பின்னர், அவை விவதத்திற்கு உட்படுத்தப்பட்டு தரவரிசை படுத்தப்பட்டது. தொழில்நுட்ப அமர்வு - 2ல் உழவர்கள் தொகுத்து வழங்கிய இடர்பாடுகள் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் மட்டுமே இந்நிகழ்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது. பின்னர், பொது விவாதத்தில் அவை அனைத்தும் ஆலோசிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், உழவர்கள் மத்தியில் கீழ்க்கண்ட கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் விவாதத்தில் அளிக்கப்பட்டது. தொழில் நுட்ப அமர்வு - 3 ன் தொடர்ச்சியாக புலம் வாரியான தலையீடுகள் மற்றும் அணுகுமுறைகள் பற்றிய கலந்துரையாடல் பொது விவாத மேடையில் நடைபெற்றது. உழவர்கள் முக்கியமாக எடுத்துரைத்தவை விவரிக்கப்பட்டுள்ளன.

1) மாவட்டத்தில் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

2) மண்வளம் பேணுதல் மற்றும் வளங்குன்றா வேளாண்மை முறைகளில் கவனம் செலுத்துதல்

3) ஊரகப்பகுதிகளில் வாழ்விடங்களைப் பராமரித்தல்

4) கால்நடைகளுக்கு பொது சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பராமரிப்பு

5) பண்ணைகள் மற்றும் பண்ணைத் தொழிலாளிகள் சமூகங்களை வேளாண் முன்னேற்றத்திற்கு வலுப்படுத்துதல்

6) உற்பத்தி முறைகளை சுற்றுப்புறச்சூழல் வளத்துடன் இணைத்து, உற்பத்தி இடைவெளிகளை பல்வேறு புலங்களில் குறைத்தல்

7) கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் அத்துறைகளுக்குண்டான குறிக்கோள்களை அடைய உழவர்களது களங்கள், அவை சார்ந்த சமூகங்கள் உறுதுணையாக இருத்தல்

**தொழில்நுட்ப அமர்வு -4 : வேளாண் சிறப்புப்பட்டறை**

விழுப்புரம் மாவட்டத்தில் உழவர்கள் எதிர்காலத்தில் கவனத்தில்

கொள்ள வேண்டிய விஷயங்கள் இறுதியாக இச்சிறப்புப்பட்டறையில் விவாதப்பொருளாயின. அவற்றிற்கான ஏற்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பொருள் 1 | : | பருவநிலை மாற்றம், இடர்பாடுகள் மற்றும் ஏற்புடைய வேளாண்மை |
| கருத்துக்கள் | : | பருவநிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மாநில அளவிலும், பிராந்திய அளவிலும் மாறுபாடுகளை கவனித்து உழவர்களுக்கு திட்டங்கள் செயல்படத்த வேண்டும். புதிய வகை பயிர் சுழற்சிகள், இயற்கை வளம் கூடுவதற்கும், நீர் ஆதாரத்தினைப் பெருக்குவதற்கும் மாவட்ட அளவில் கட்டமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். மாற்றங்களை ஏதிர்கொள்ள உழவர்களையும் மற்றும் அறிவியல் சார் துறையினரையும் தயார்படுத்த வேண்டும். |
| பொருள் 2 | : | நிலம் மறறும் பகுதிசார் வளத்திற்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணையம் |
| கருத்துக்கள் | : | விழுப்புரம் மாவட்டம் ஒருங்கிணைந்த பண்ணையத்திட்டம் செயல்படுத்தவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது வரவேற்கப்பட்டது. கிராமப்புறங்களில் நிலவும் சூழல்களான வேலையாட்கள் பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை போன்றவை தொழில்நுட்பங்களைக் கையாளும் பொழுது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், மேம்படுத்தப்பட்ட முறைகள், கால்நடை மற்றும் பிற இனங்கள், நன்செய், புன்செய் மற்றும் மானாவாரிப் பகுதிகளுக்கு ஏற்ற வகையில் அறிமுகம் செய்ய வேண்டும். உழவர்களுக்கு இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். |
| பொருள் 3 | : | பாரம்பரிய முறைகள், இரகங்கள், அவற்றின் காப்பாளர்கள் மற்றும் புவிசார் குறியீடுகள் |
| கருத்துக்கள் | : | தொன்றுதொட்டு கடைபிடிக்கப்படும் வேளாண்மை முறைகள், பாரம்பரிய பயிர் இரகங்கள் பாதுகாப்படவேண்டும். இதன் மூலம் நன்னெறி மற்றும் வளங்குன்றா வேளாண்மை, இயற்கை வழி வேளாண்மை முறைகளில் தனிகவனம் செலுத்தவும், கடைபிடிக்கவும், ஆராய்ச்சி புலங்களுக்கு தகவல் அளிக்கவும் வாய்ப்புகள் உருவாகும் |
| பொருள் 4 | : | அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள், மதிப்புக் கூட்டுதல் மற்றும் உழவர்களது வணிக ஆளுமையை மேம்படுத்துதல் |
| கருத்துக்கள் | : | தற்போதைய நிலையில் இருந்து உழவர்களது பண்ணை வருவாய் மற்றும் நிகர இலாபத்தினை உயர்த்த விளை பொருட்களை மதிப்புக் |

கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவது இன்றியமையாதது. எனவே, சிறு தொழில் கூடங்கள், பதப்படுத்தும் கிடங்குகள், வாகன வசதிகளில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்துறைகள் இணைந்து செயலாற்ற வேண்டும். மேலும், காளான் வளர்ப்பு, சிறுதானிய பொருட்கள் உற்பத்தி, தர நிர்ணயம், விற்பனையுக்திகள், களப்பயிற்சிகள் போன்றவை முன்னுரிமை பெற வேண்டும்.

| | | |
|---|---|---|
| பொருள் 5 | : | ஊரக இளைஞர்களை வேளாண்மையில் முன்னிறுத்தல் |
| கருத்துக்கள் | : | கிராமப்புற இளைஞர்கள் வேளாண்மையில் முனைப்புடன் ஈடுபட மற்றும் மாவட்டத்தில் மிகப்பெரும் தாக்கத்தினை ஏற்படுத்த கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கத் துறைகள், வங்கிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கால்நடை, மீன்வளம் போன்ற தொகுதிகளில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். |
| பொருள் 6 | : | புதுமைகளை படைப்போர் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை இனம் காணுதல் |
| கருத்துக்கள் | : | கிராமப்புற இளைஞர்கள் புதுமைகளைப் படைப்பதில் வல்லவர்களாக உள்ளனர். மேலும், கண்டுபிடிப்பாளர்களும் உள்ளனர். இவர்களை இனம் கண்டு பரவலாக்கத்திற்கு வாய்ப்புள்ள புதமையான தொழில்நுட்பங்களின் படைப்பாளிகளை ஊக்குவிக்க வேண்டும். மாவட்ட அளவில் முன்னோடி வங்கிகள் நிதி ஆதாரம் அளிக்க வேண்டும். அறிவியல் சார்துறைகள் இவர்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். |
| பொருள் 7 | : | வெற்றிப்பாதையில் செல்பவர்களை இனம் காணுதல் மற்றும் அவர்களைத் திட்டங்களில் ஈடுபடுத்துதல் |
| கருத்துக்கள் | : | உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் முன்னிலை வகிக்கக்கூடிய உழவர்கள், உழவர் குழுக்கள் போன்றவை கிராமப்புற அளவில் இனம் கண்டு தொகுக்கப்படவேண்டும். அவர்களது வெற்றிக் கதைகள், தாக்கம் ஆகியவை பிரசுரிக்கப்பட வேண்டும். மேலும், இப்படிப்பட்ட முன்னோடி உழவர்கள் தகுதித்திறன் மற்றும் தேர்ச்சித்திறன் வளர்ப்பு பட்டறைகள், பயிற்சிகளில் ஈடு படுத்தப்படவேண்டும். |
| பொருள் 8 | : | வேளாண்மையில் தகுதித்திறன் மற்றும் தேர்ச்சித் திறன் வளர்ப்பு |
| கருத்துக்கள் | : | உழவர் குழுக்கள், அரசு சாராத் துறைகள் தங்களது தேவைக்கு ஏற்ப முழுமனதுடன் ஆராய்ச்சித் துறை மற்றும் விரிவாக்கத்துறைகளுடன் இணைந்து பண்பு மெருகூட்டல் |

முயற்சியில் ஈடுபட வேண்டும். இதன் மூலம், உழவர்களது தேவைகள் பூர்த்தி செய்ய வாய்ப்பு ஏற்படும்.

நிறைவு அமர்வு : ஒரு நாள் பட்டறையின் நிறைவாக முனைவர். க. நடராஜன், தொழில்நுட்ப வல்லுநர் (விதை நுட்பவியல்), அனைத்து நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினார். முனைவர். ந. சாத்தையா, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், நிறைவுரை ஆற்றினார். அப்போது, அவர் உழவர்கள் எதிர்காலத்தில் அறிவியல் ரீதியாக செயல்பட வேண்டும். ஒவ்வொரு நிலமும் பண்புகளில் மாறுபாடு கொண்டுள்ளது. எனவே, கடைபிடிக்கக் கூடிய முறைகள் நிலப்பாங்கிற்கேற்ப அமைய வேண்டும். இது வெற்றிக்கு அடிப்படையாக அமையும் என்றார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து உழவர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்தார். இறுதியாக முனைவர்.மு.ரேணுகா, தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை) நன்றியுரை ஆற்றினார். தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## 3. விழுப்புரம் மாவட்ட வேளாண்மை மற்றும் வேளாண் சார் தொழில்களின் பலம், பலவீனம், வாய்ப்பு, சவால்கள் பற்றிய கலந்தாய்வு

**குழு - 1 உறுப்பினர்களின் விவரம் :-**

1. விஞ்ஞானிகள் : முனைவர் .மு.ரேணுகா
   தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
   : திரு. ஆ. ஆறுமுகம்
   இளநிலை விஞ்ஞானி
2. குழு பிரதிநிதி : திரு.சு.ரமேஷ்
   இரங்கநாதபுரம்
3. உழவர்கள் :
   1. திரு.எஸ். கோபால வாசுதேவன்
      வானூர்
   2. திரு.சு.ரமேஷ்
      இரங்கநாதபுரம்
   3. திரு.ஆ.ஸ்ரீதரன்
      விழுப்புரம்
   4. திரு.நி.திருமால்
      மரக்காணம்
   5. திரு.வை. முத்துசாமி
      உளுந்தூர்பேட்டை
   6. திரு.ந. சங்கர்
      மரக்காணம்
   7. திரு.த.பாண்டியன்
      உளுந்தூர்பேட்டை
   8. திரு.பெரியண்ணன்
      சின்னசேலம்
   9. திரு.ந.லோகநாதன்
      செஞ்சி

10. திரு.ஜி.துரைகிருஷ்ணன்
    ஓலக்கூர்
11. திருமதி.ஜி.வசந்தி
    ஓலக்கூர்
12. திரு.ரா.ராமச்சந்திரன்
    மேல்மலையனூர்

**பலங்கள்**

1. பயிர்சாகுபடிக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலைகள்
2. பல்வேறு வகையான பயிர் சாகுபடிக்கு உகந்த மண்கண்டங்கள்
3. நவீன தொழில் நுட்பங்களைச் செயல்படுத்துதல்
4. வேளாண்மை அறிவியல் நிலையம், ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் சார்ந்த பல்துறைகள், வங்கித்துறை ஒத்துழைப்பு மற்றும் கவனம்

**பலவீனங்கள்**

1. விவசாய கூலித்தொழிலாளர்கள் பற்றாக்குறை
2. நவீன இயந்திரங்கள் பற்றாக்குறை
3. வேளாண் பொருட்களுக்கு எதிர்பார்ப்புக்கு ஏற்ற விற்பனை வாய்ப்புகள் இல்லாமை
4. வனவிலங்குகளால் வேளாண் பயிர்களுக்கு அதிக இழப்புகள்
5. வேளாண் விளைபொருட்களை எடுத்து செல்வதற்கான வாகன வசதியின்மை
6. தனி நபர் விவசாய காப்பீடு திட்டத்தை முறையாக அமல்படுத்தாமை
7. சொட்டு நீர் பாசனத்தில் பயன்படுத்தப்படும் நீரில் கரையும் உரங்கள் கிடைப்பதில் சிக்கல்
8. காய்கறிப்பயிர்களை சாகுபடி செய்யும் உழவர்களுக்கு பல்கலைக்கழக ஒட்டுரக விதைகள் கிடைப்பதில் சிக்கல்
9. உழவர்கள் விரும்பக்கூடிய கரும்பு இரகங்களை சர்க்கரை ஆலைகள் ஊக்குவிப்பதில் சிக்கல்
10. ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் ஒன்றிய அளவில் இல்லை

**வாய்ப்புகள்**

1. தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை விவசாய வேலைகளுக்கு முறையாக பயன்படுத்துதல்
2. மானிய விலையில் உழவர்களுக்கு வழங்கப்படும் இயந்திர கருவிகள் எண்ணிக்கையை அதிகப் படுத்துதல்
3. திருந்திய நெல் சாகுபடி, வேளாண்மையில் சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன முறைகள், துல்லிய பண்ணைய முறையில் பயிர் சாகுபடி செய்ய வாய்ப்புகள்

**சவால்கள்**

1. வேளாண் பொருட்களை விற்பனை செய்தல்
2. தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்
3. நிலத்தடி நீர் மட்டம் குறைத்து கொண்டு வருதல்
4. பருவ நிலையில் மாற்றம் ஏற்படுவது
5. பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்
6. இடைத்தரகர்களால் வேளாண் பொருட்களின் விலைகள் அதிகமாகுதல்
7. உள்ளடங்கிய கிராமப் பகுதிகளிலும் விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாறிக் கொண்டு வருவது

## வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு முனைதல்

| வ.எண் | வகைப்படுத்தப்பட்ட பிரச்சினை | வாய்ப்புகள் | கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் | தீர்வுக்கு வேண்டிய தேவைகள் |
|---|---|---|---|---|
| 1. | கூலியாட்கள் பற்றாக்குறை | 1. இயந்திரமயமாக்குதல்<br>2. தேசிய ஊரக வளர்ச்சித்திட்டத்தில் கூலியாட்கள் விவசாய வேலை களுக்கு முழுமையாகப் பயன் படுத்தல் | • புதிய இயந்திரவியல் தொழில்நுட்ப உத்திகளை கையாலுதல்<br>• கூலியாட்கள் பயன்பாட்டிற்கு பல்கலைக்கழக வழிகாட்டல்கள்<br>• கூலியாட்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | • இயந்திரப் பண்ணைகள் அமைத்தல்<br>• தொழில் முனைவோர்க்கு களப் பயிற்சிகள் வழங்குதல்<br>• ஊராட்சித் தலைவர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி வழங்குதல் |
| 2. | விற்பனை வாய்ப்பு குறைதல் | 1. சந்தைகளை அதிகப்படுத்துதல் | • அறுவடை பின்செய் தொழில் நுட்பத்தை பலப்படுத்துதல் | • மதிப்புக் கூட்டப்பட்ட பொருட் களாக மாற்றுதல்<br>• பயிற்சிகள் மூலம் பயன்பெறுதல் |
| 3. | நவீன இயந்திரப் பற்றாக்குறை | 1. இயந்திரங்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்<br>2. பண்ணை இயந்திரங்களுக்கு மானியத் திட்டத்தை அதிகப்படுத்துதல் | • தரமான நிறுவனங்கள் மூலம் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல்<br>• இயந்திர பராமரிப்பு நிலையங் களை வாய்ப்புள்ள பகுதிகளில் அமைத்தல் | • கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாய குழுக்களுக்கு 100 % மானியத்தில் இயந்திரங்களை வழங்குதல்<br>• பயிற்சிகள் வழங்க முனைதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | குளிர்பதன கிடங்கு இன்மை | 1. வட்டார வாரியாக கிடங்கு அமைத்தல்<br>2. ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்தல் | • ஏற்ற பயிர்களை சாகுபடி செய்தல்<br>• போக்குவரத்து வசதி உள்ள இடத்தில் கிடங்குகள் அமைத்தல் | • 100 % மானியத்தில் குளிர்பதன கிடங்கு அமைக்க திட்டங்கள் செயல்படுத்துதல் |
| 5. | வனவிலங்குகளால் வேளாண் விளை நிலத்தில் பாதிப்பு | 1. சூரிய சக்தி மூலம் மின் தடுப்பு வேலி அமைத்தல் | • மாற்றுப் பயிர்களைச் சாகுபடி செய்தல்<br>• சகதுறைகளுடன் ஆலோசனை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறைகளைக் கையாளுதல் | • பயிர்களுக்கு காப்பீடு வழங்கப்படுதல்<br>• சூரிய மின் வேலி அமைக்க புதிய மானியத் திட்டம் தயாரித்தல் மற்றும் செயல் படுத்துதல் |
| 6. | நீரில் கரையும் உரங்கள் பற்றாக்குறை | 1. உழவர் குழுக்கள் மூலமாக விற்பனை செய்தல் | • தரமான உரங்களை அளித்தல் மற்றும் கட்டுபடியான விலை நிர்ணயித்தல் | • உரப் பயன்பாடு நிலைத்திருக்க அரசு 50% மானியம் வழங்குதல் |
| 7. | நீர்வள மேம்பாடு | 1. தடுப்பு அணை<br>2. பண்ணை குட்டை<br>3. சொட்டு நீர் பாசனம்<br>4. நிலப் போர்வை | • பருவ மழைக்கு முன்பாக வாய்ப்பினை ஏற்படுத்துதல் | • 100% மானியத்தில் விளை நிலங்களில் அமைக்க திட்டம் பரவலாக்கம் செய்தல் |
| 8. | ஒருங்கிணைந்த பண்ணையம் | 1. நன்செய், புன்செய் மானவாரி நிலங்களில் ஒருங்கிணைந்து உற்பத்தித்திறன் பெருக்கத்திற்கு | • நிலத்தின் அமைப்புக்கு ஏற்றபடி, ஒருங்கிணைந்த பண்ணைய முறையைத் தேர்வு | • பயிற்சிகள்<br>• கண்டுணர் சுற்றுலா<br>• விற்பணை வாய்ப்பு ஏற்படுத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பல்துறைகளின் இணைப்பு | செய்தல் | கொடுத்தல்<br>• திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் |
| 9. | அரசு திட்டங்களைப் பற்றிய தெளிவின்மை | 1.தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் முன்னோடி உழவர் குழுக்களுக்கு தெரியப்படுத்துதல் | • திட்டங்கள் உழவர்களுக்கு சென்றடைவது விடுபடாமல் இருத்தல் | • உழவர் குழுக்கள், வளைதளம் மூலம் திட்டங்களை கடை நிலை உழவர் வரைத்தெரியப்படுத்துதல் |
| 10. | பூச்சி மற்றும் நோய் தாக்குதல் | 1. விதை மற்றும் பருவ நிலை தேர்வு | • பயிர்சுழற்சி, இயற்கை உரம் அளித்தல் | • எதிப்புதிறன் கொண்ட பயிர இரகங்களை கண்டுபிடித்தல் மற்றும் பரவலாக்கம்<br>• ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகளைக் கையாளவும் அனைத்து திட்ட காரணிகளும் உழவர்களுக்குக் சென்றடைய திட்டங்கள் தயாரித்து செயல் படுத்துதல் |

**குழு -2 உறுப்பினர்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானிகள் | : | முனைவர் .கு.கவிதா<br>தொழில்நுட்ப வல்லுநர் (பயிர் நோயியல்) |
| | | திரு.வி.வீராசாமி<br>முதுநிலை ஆராய்ச்சியாளர் |
| குழு பிரிதிநிதி | : | திரு.ப. சேதுராமன்<br>வானூர் |
| உழவர்கள் | : | 1. திரு.ப. நாராயணசாமி<br>வானூர்<br>2. திரு.கோ. பெருமாள்<br>செஞ்சி<br>3. தெிரு.வை.நடராஜன்<br>சங்கராபுரம்<br>4. திரு.அ.சிவகுமார்<br>மரக்காணம்<br>5. திரு.சோ. பக்தவச்சலம்<br>மரக்காணம்<br>6. திரு.மு.கண்ணன்<br>ஓலக்கூர்<br>7. திரு.ப. சேதுராமன்<br>வானூர்<br>8. திரு.கோ. பாலு<br>திருவெண்ணெய்நல்லூர்<br>9. திரு.கி.வெங்கடேசன்<br>மரக்காணம்<br>10. திரு.மா.மனோகரன்<br>மரக்காணம்<br>11. திரு.கு.ராஜேந்திரன்<br>வல்லம் |

**பலங்கள்**

1. வருடம் முழுவதும் பயிர் சாகுபடி செய்வதற்கேற்ற தட்பவெப்பம் உள்ளது
2. சந்தை வசதி மற்றும் சென்னைக்கு அருகில் உள்ளது
3. அனைத்து துறை சார்ந்த அலுவலர்களின் பங்கேற்பு, ஆராய்ச்சி மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம் பங்களிப்பு இருக்கின்றது
4. சொட்டு நீர் பாசன வசதி வலுவடைந்து வருகின்றது
5. நவீன முறையில் காய்கறி மற்றும் பணப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது
6. ஒருங்கிணைந்த பண்ணையத்திற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது
7. மலையும் கடலும் இணைந்து பல்வேறு தொழில் கட்டமைப்புகள் உள்ளது
8. மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சாலை மற்றும் மின்சார வசதிகள் உள்ளுத

**பலவீனங்கள்**

1. வேலை ஆட்கள் பற்றாக்குறை
2. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் தேர்ந்த வேலையாட்கள் இல்லாதது
3. குளிர் பதன வசதி இல்லாததால் காய்கறிகளை சேமித்து வைக்க வாய்ப்பு தடைபடுகிறது
4. பூச்சி மற்றும் நோய்க்கொல்லிகள் வேளாண் அலுவலர்களின் ஆலோசனை இல்லாமல் பயிர்களுக்கு தெளிக்கப்படுகிறது
5. தரமான உயிர் உரம் கிடைக்காதது
6. முறையான மண் பரிசோதனை இல்லாமல் உரங்கள் உபயோகம்
7. மழைக்காலத்தை மட்டுமே நம்பியிருக்ககூடிய ஆறுகள்
8. அறுவடை காலங்களில் விளைபொருட்களுக்கு அதிக விலை கிடைப்பதில்லை

**வாய்ப்புகள்**

1. உயிர் உரங்களை அனைத்து துறைகள் மூலமாக கிடைக்கச்செய்தல்
2. திருந்திய நெல் சாகுபடி மற்றும் நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் மூலம் உற்பத்தியை பெருக்கி, செலவீனம் மற்றும் நீர் பயன்பாட்டினை குறைக்க செய்தல்
3. உழவர்களின் வருமானம் பெருக மானியங்கள் மூலம் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல்
4. கால்நடை மற்றும் கோழியினங்கள் உற்பத்திக்கு அதிக வாய்ப்புகள்

**சவால்கள்**

1. தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தால், வேளாண்மை தொழில் அதிகமாக பாதிக்கப்படுகிறது
2. நிலத்தடி நீர் ஆண்டுக்கு ஆண்டு குறைகிறது
3. கடல்நீர் ஊடுருவதால் நிலத்தின் தன்மை மாறுகிறது
4. பருவ மாற்றத்தால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகமாக உள்ளது
5. காட்டு விலங்குகளால் பயிர்கள் அதிக சேதம் அடைகின்றது
6. குறைந்து வரும் வனவளம்
7. கிராமப்புறங்களில் மரப் போர்வை குறைந்துள்ளது

**<u>வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு முனைதல்</u>**

| வ.எண் | வகைப்படுத்தப்பட்ட பிரச்சினை | வாய்ப்புகள் | கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் | தீர்வுக்கு வேண்டிய தேவைகள் |
|---|---|---|---|---|
| 1. | நீர் பற்றாக்குறை | 1. தடுப்பணை கட்டுதல்<br>2. ஆழ்துளை கிணறுகள் மூலம் மழை நீரை பூமிக்கு உள் செலுத்துதல்<br>3. பண்ணை குட்டை அமைத்தல்<br>4. நீர்வரத்து கால்வாய்களை பராமரித்தல்<br>5. சொட்டு நீர்ப் பாசனம் அமைத்தல் | • வேளாண் பொறியியல் மற்றும் வேளாண் துறையின் ஆலோசனை<br>• வாய்ப்பு உள்ள இடங்களில் மரம் வளர்த்தல் | • மானிய விலையில் தடுப்பணை, ஆழ்துளை கிணறுகள், பண்ணை குட்டை மற்றும் சொட்டு நீர்ப் பாசன வசதி ஏற்பாடு செய்ய அரசு ஆவண செய்ய வேண்டும்<br>• முன்னுரிமை அடிப் படையில் பண்ணைக் குட்டைகளைப் பரவ லாக்கம் திட்டம் |
| 2. | வேளாண் கூலியாட்கள் பற்றாக் குறை | 1. இயந்திரமயமாக்குதல்<br>2. தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட பணியாளர்களை வேளாண்மை செயல் பாடுகளுக்கு பயன்படுத்துதல்<br>3. சொட்டு நீர்ப் பாசனம் பரந்த அளவில் அமைத்தல் | • வேளாண் இயந்திரங்களை இயக்க தேர்ந்த பயிற்சியாளர்களை கிராமப்புற அளவில் பணியமர்த்துதல் | • வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்குதல்<br>• வேளாண் கருவி களைப் பராமரிக்க பயிற்சி அளித்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நீரில் கரையும் உரம் பற்றாக்குறை மற்றும் தகுந்த காலத்தில் கிடைப்பதில்லை | 1. தரமான உரங்களை அரசு வழங்குதல் | • தகுந்த சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களிருந்து உரம் வாங்குதல் | • அரசு மானிய விலையில் அதிக அளவில் உரங்கள் வழங்க வேண்டும் |
| 4. | ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றிய தெளிவின்மை | 1. ஆடு ,மாடு, மீன், கோழி, காளான் மற்றும் பிற தொழில்நுட்பங்களை ஒன்றிணைத்து வருமானத்தை கூட்ட பிரகாசமான வாய்ப்புகள் | • பசுந்தீவனப் பயிர்களை ஊக்குவித்தல்<br>• தரமான விதை மற்றும் நடவுப் பொருட்களை கிடைக்க செய்தல்<br>• அடர்தீவனம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை | • அனைத்து துறைகள் ஒன்றாக இணைந்து திட்ட செயல்பாடு<br>• கண்டுணர் சுற்றுலா மற்றும் திறன் வளர்ப்பு நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க புலங்கள் செயல்படுத்துதல் |
| 5. | பயிர்ப்பாதுகாப்பில் உள்ள புதிய பிரச்சினைகள் | 1. ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை<br>2. தரமான விதைத் தேர்வு<br>3. உயிரியல் முறையில் பயிர் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அளித்தல் | • ஓரே வகையான பூச்சிக் கொல்லியினை அடிக்கடி உபயோகம் செய்வதை தவிர்த்தல்<br>• நோயின் தீவிரத்தை அறிந்து பூஞ்சாணக்கொல்லி தெளித்தல்<br>• ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை | • மாவட்டத்தில் ஒருங்கிணைத்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளுக்கு புதிய திட்டங்களைச் செயல்படுத்துதல் |

**குழு - 3 உறுப்பினர்களின் விபரம் :-**

1. விஞ்ஞானிகள் : முனைவர் .கா.செந்தமிழ்
   தொழில் நுட்ப வல்லுநர் (நூற்புழுவியல்)
   செல்வி. கு. எழிலரசி
   இளநிலை விஞ்ஞானி
2. குழு பிரதிநிதி : திரு.ரங்கராஜு
   கிழக்கு மருதூர்
3. உழவர்கள் :
   1. திரு. டி.ஆர். ஜெயக்குமார்
      திருப்பாச்சனூர், கோலியனூர் ஒன்றியம்
   2. திரு.என். முருகையன்
      சடையாண்டிக்குப்பம், கண்டமங்கலம் ஒன்றியம்
   3. திரு.ரங்கராஜு
      கிழக்கு மருதூர், உளுந்தூர்பேட்டை ஒன்றியம்
   4. திரு.பி. சரங்கன்
      கிளாப்பளையம், திருநாவலூர் ஒன்றியம்
   5. திரு.ஆர் சத்தியா
      எடையபட்டு, வானூர் ஒன்றியம்
   6. திரு. பி. ரங்கநாதன்
      தாதாபுரம், ஓலக்கூர் ஒன்றியம்
   7. திரு.கே. மணி
      பா.கிள்ளனூர், உளுந்தூர்பேட்டை ஒன்றியம்
   8. திரு.எஸ். வாசுதேவன்
      செண்டுர், மயிலம் ஒன்றியம்
   9. திரு.டி.அண்ணாமலை
      தேப்பரம்பட்டு, மேல்மலையனூர் ஒன்றியம்

பலங்கள்

1. வேளாண்மையில் உழவர்கள் தன்னிச்சையான முடிவில் பயிர் சாகுபடி
2. நவீன வேளாண் இயந்திரங்களின் பயன்பாடு
3. விழுப்புரம் மாவட்டம் மூன்று பெரிய நகரங்களுக்கு அருகாமையில் உள்ளது
4. தானிய மறறும் எண்ணெய்வித்துப் பயிர்கள் அரசின் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் சந்தைபடுத்துவது

பலவீனங்கள்

1. வேளாண் தொழிலாளர்கள் தகுந்த நேரத்தில் வயல்வெளி பயன்பாட்டிற்கு கிடைப்பதில்லை
2. நீர்ப் பாசனத்திற்கு போதிய மின்சாரம் கிடைப்பதில்லை
3. தொடர்ந்து இரசாயன உரங்கள், களைக் கொல்லிகள் மற்றும் பயிர்பாதுகாப்பு கொல்லிகளின் உபயோகம்
4. வேளாண் விளைப் பொருட்களுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைப்பதில்லை
5. உழவர்களிடம் போதிய நிதி ஆதாரம் இல்லை
6. இடை தரகர்களின் மூலம் சந்தைபடுத்துவதால் போதிய இலாபம் கிடைப்பதில்லை
7. வனவிலங்குகளினால் தாக்கத்தினால் ஏற்படும் அழிவிற்கு அளவில்லை
8. வேளாண் இடுபொருட்களின் விலை ஏற்றம்
9. தோட்டக்கலை விளைப் பொருட்களுக்கு குளிர்பதன சேமிப்பு கிடங்கு வசதி இல்லாமை
10. சிறு விவசாயிகளுக்கு வாங்கும் திறனுக்கு ஏற்ற பண்ணை கருவிகள் இல்லாமை
11. கிராமவாரியான பயிர் காப்பீடு நிவாரணம் மற்றும் உதவி இல்லாமை

வாய்ப்புகள்

1. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் அலுவலர்களை அரசு வேளாண்மைக்கு பயன்படுத்துதல்
2. வேளாண் இயந்திரங்களை அனைத்து விவசாயிகளுக்கும் 75 ˅ மானிய விலையில் வழங்குதல்

3. சோலார் மின் மோட்டார் இலவசமாக அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கப்பெருதல்
4. குளிர்பதன கிடங்குகள் வட்டார அளவில் ஏற்படுத்துதல்
5. வங்கி கடன் விரைந்து வழங்குதல்
6. கிராமவாரியாக (அ)தனி நபர் வயல் இழப்பு கணக்கு எடுத்து நிவாரண உதவி வழங்குதல்

சவால்கள்

1. வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை
2. மின்சாரத் தட்டுப்பாடு
3. குறைந்து கொண்டு வரும் மண் வளம் மற்றும் நீர் ஆதாரம்
4. பருவநிலை மாற்றம்
5. விளை நிலங்கள் நகரமாக்கப்படுதல்

**வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு முனைதல்**

| வ.எண் | வகைப்படுத்தப்பட்ட பிரச்சினை | வாய்ப்புகள் | கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் | தீர்வுக்கு வேண்டிய தேவைகள் |
|---|---|---|---|---|
| 1. | குறைந்து வரும் மண் வளம் | 1. மண்புழு உரமிடுதல், தொழு உரம், பசுந்தாள் உரமிடுதில் | • மண் பாங்கிற்கு ஏற்ற விலை குறைவான இயந்திரங்கள் மற்றும் தேவையான தொழில் நுட்பம் | • எளிதில் கிடைக்கக்கூடிய மண் புழு உரம் உபயோகம்<br>• மண் புழு வளா்ப்பு பயிற்சி<br>• பசுந்தாள் பயிர்களின் விதைகள் எளிதில் கிடைக்க வழிவகை |
| 2. | குறைந்து வரும் நீா் ஆதாரம் | 1. தடுப்பணை அமைத்தல்<br>2. பண்ணை குட்டை அமைத்து நீா் சேகரிப்பு<br>3. ஏரி, குளம் வாய்க்கால் சீா் செய்தல் | • தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்ட உபயோகத்தில் உழவா் தேவைகளுக்கு முன்னுரிமை | • தென்பெண்ணை,கெடிலம் ஆறுகளின் பாசனப் பகுதிகளில் தடுப்பணை களை அமைத்தல் |
| 3. | மின்சாரத் தட்டுப்பாடு | 1. சூரிய சக்தி மின் மோட்டார்கள் அமைத்து பாசன உபயோகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துதல் | • பராமரிப்பு மற்றும் இயக்கம் பற்றிய செயல்களில் உள்ள திறன் வளா்ப்பு | • முழுமானியத்துடன் கூடிய சூரியசக்தி மின் சாதனங்கள் அளித்தல் |
| 4. | இடைத்தரகா்களின் மூலம் சந்தைப் படுத்துதல் | 1. குளிா் பதன சேமிப்பு கிடங்கு அமைத்தல்<br>2. அரசு கொள்முதல் நிலையங்கள் மூலம் சந்தைப்படுத்த ஏற்பாடு<br>3. உழவா்கள் விற்பனைக் குழு அமைப்பு | • நுகா்வோருக்கு பகுதிக்கேற்ற இரகம் மற்றும் தரம் தோ்வு செய்தல் | • முறையான அணுகுமுறை பயிற்சி மற்றும் தரமான விதைகள் |
| 5. | பருவநிலை மாற்றம் | 1. தகுந்த இரகம் மற்றும் பயிா்களை சாகுபடி செய்தல் | • உழவா் குழுக்கள் மற்றும் பஞ்சாயத்து நிா்வாகம் இணைந்து செயல்படுதல் | • ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத் தகவல்கள் தேவை |

**குழு - 4 உறுப்பினர்களின் விபரம் :-**

1. விஞ்ஞானிகள் : முனைவர். க. நடராஜன்
   தொழில் நுட்ப வல்லுநர் ( விதை நுட்பவியல்)

   திருமதி. ஆ.விஜயலெட்சுமி
   திட்ட உதவியாளர் (கணிணி)

2. குழு பிரதிநிதி : திரு.சி.ஜோதிராமன்
   பா.கிள்ளனூர்,உளுந்தூர்பேட்டை ஒன்றியம்

3. உழவர்கள் :
   1. திரு.க.பலராமன்
      சென்னகுணம், முகையூர் ஒன்றியம்
   2. திரு.நா.வெங்கடேசன்
      நந்திபுரம், செஞ்சி ஒன்றியம்
   3. திரு.கோ.ரவிச்சந்திரன்
      பொன்னங்குப்பம், விக்கிரவாண்டி ஒன்றியம்
   4. திரு.கு.சோமு
      சீனுவாசபுரம், கண்டமங்கலம் ஒன்றியம்
   5. திரு.பெ.கந்தசாமி
      பிரதிவிமங்கலம், தியாகதுருகம் ஒன்றியம்
   6. திரு. வா.சுந்தர் ஆனந்த்
      செண்டூர், மைலம் ஒன்றியம்
   7. திரு.மா.பழனி
      தச்சம்பட்டு, செஞ்சி ஒன்றியம்
   8. திரு.சி.ஜோதிராமன்
      பா.கிள்ளனூர், உளுந்தூர்பேட்டை ஒன்றியம்
   9. திரு.டி.அண்ணாமலை
      செண்டூர், மயிலம் ஒன்றியம்
   10. கா.கப்பலோட்டியதமிழன்
       செக்கடிக்குப்பம், மேல்மலையனூர் ஒன்றியம்
   11. திரு.ர. சீனுவாசன்
       திருப்பாச்சனூர், கோலியனூர் ஒன்றியம்
   12. திரு. கோ. நடராஜன்
       குமளம், கண்டமங்கலம் ஒன்றியம்

**பலங்கள்**

1. வேளாண் (நெல், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள்) மற்றும் தோட்டக்களைப் பயிர்கள் (காய்கறி, பழ மற்றும் நறுமணப்பயிர்கள்) சாகுபடி அதிகமாக உள்ளது
2. கால்நடை, பண்ணை கோழி மற்றும் மீன் வளர்ப்பு நல்ல முறையில் உள்ளது
3. மரம் வளர்ப்பு அதிகமாக உள்ளது

**பலவீனங்கள்**

1. தரமான விதை தகுந்த நேரத்தில் கிடைப்பதில் சிக்கல்கள்
2. வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு சரியான விலை கிடைப்பதில்லை
3. மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது
4. சரியான நேரத்தில் உரங்கள் கிடைப்பதில்லை
5. கூலி ஆட்கள் பற்றாக்குறை உள்ளது
6. வங்கி கடன் கிடைப்பதில்லை
7. விவசாய பொருட்களைச் சேமித்து வைக்க சேமிப்புக்கிடங்கு தேவையான அளவு இல்லாததால் குறைந்த விலைக்கு விளை பொருட்களை விற்க நேரிடுகிறது
8. ஏற்றமதி செய்ய ஏற்ற வசதிகள் குறைவாக உள்ளது

9. ஒரே நேரத்தில் அனைத்து உழவர்களும் அறுவடை செய்வதால் அறுவடை இயந்திரம் கிடைப்பதில்லை
10. அதிகளவில் ஏரி, குளம் பகுதிகளை ஆக்கிரமித்து பயிர் செய்வதால் நீர் தேக்கம் குறைவாக உள்ளது
11. கூலி ஆட்களை வைத்து ஏரி குளம் சீரமைப்பதால் அதிகளவு செலவு ஆகிறது

**வாய்ப்புகள்**

1. உழவர்களை விதை உற்பத்தி செய்ய கிராம வாரியாக அதிகளவில் ஊக்கப்படுத்துதல்
2. கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய வங்கி மூலம் கரும்பு மட்டுமல்லாமல் அனைத்து பயிர்களுக்கும் பயிர் கடன் உரிய காலத்தில் கொடுத்தல்
3. சுயஉதவிக் குழுக்கள் மூலம் உழவர்களுக்கு உரிய நேரத்தில் கடன் உதவி செய்தல்
4. மின்சாரப் பற்றாக்குறை உள்ளதால் சூரிய மின்சக்தி கொண்டு மின் உற்பத்தி செய்தல்
5. உற்பத்தி பொருட்களுக்கு தகுந்த விலை கிடைக்காததால் சுய உதவி குழுக்கள் விளைப் பொருட்களை மதிப்புக்கூட்டி உரிய விலைக்கு விற்றல்
6. இயற்கை சீற்றங்களால் ஏற்படும் இழப்புகளை நிவர்த்தி செய்ய ஒவ்வொரு பயிருக்கும் காப்பீடு கூடிய விரைவில் கொடுத்தல்
7. நீர் ஆதாரம் குறைவாக உள்ளதால் பண்ணை குட்டை, செக் டேம் அமைத்து மழை நீரை பயனுள்ள வகையில் பயன்படுத்துதல்
8. தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால் சொட்டுநீர், தெளிப்பு நீர்ப் பாசன முறையை அதிக அளவு பயன்படுத்தி அதிக மகசூல் எடுத்தல்
9. ஆட்கள் பற்றாக்குறை உள்ளதால் நவீன இயந்திரங்களை கொண்டு உற்பத்தியை பெருக்குதல்

**சவால்கள்**

8. விளை நிலங்கள் ரியல் எஸ்டேட்டாக மாறுவது
9. இயற்கை சீற்றத்தால் பயிர் பாதிப்பு
10. கூலியாட்கள் பற்றாக்குறைவால் இயந்திரம் பயன்படுத்துதல்
11. நச்சுத்தன்மை உள்ள பூச்சிக் கொல்லிகளை உபயோகிப்பதால் வளம் குறைந்துள்ளது
12. உற்பத்தி பெருகும் பொழுது வேளாண் விளை பொருட்களின் விலை அதிகளவில் விழ்ச்சி அடைதல்

## வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு முனைதல்

| வ.எண் | வகைப்படுத்தப்பட்ட பிரச்சினை | வாய்ப்புகள் | கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் | தீர்வுக்கு வேண்டிய தேவைகள் |
|---|---|---|---|---|
| 1. | நீர் ஆதாரம் குறைவு | 1. ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்<br>2. தடுப்பணை அமைத்தல்<br>3. கோடைகாலத்தில் ஏரி, குளம், வாய்க் கால்களை விரிவாக்குதல் | • ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை பொது உடைமை ஆக்குதல்<br>• அதிகளவில் நிதியை ஒதுக்கீடு செய்தல் | • கிராம அளவில் அரசு திட்டங்கள்<br>• மழை நீரை சேமித்து பயனுள்ள முறையில் பயன் படுத்த திட்டங்கள் |
| 2. | கூலியாட்கள் பற்றாக்குறை | 1. தேசிய ஊரக வேலை உறுதி வாய்ப்புத் திட்ட கூலி ஆட்களை விவசாய வேலைக்கு பயன்படுத்துதல்<br>2. இயந்திரமயமாக்குதல் | • பயிர் சாகுபடி காலத்தில் கூலியாட்களை ஊரகத் தொகுப்பில் இருந்து விவசாய பயன்பாட்டிற்கு வழங்குதல் | • ஒன்றிய வாரியாக இயந்திர பயிற்சி மையம் அமைத்தல்<br>• தொலைக்காட்சி, வானொலி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் |
| 3. | விதைப் பற்றாக்குறை | 1. கிராம வாரியாக விதை உற்பத்தியை அதிகப்படுத்துதல்<br>2. ஊடுபயிர் உற்பத்தி செய்தல் | • மாவட்டத்திற்கு ஏற்ற பயிர் இரங்களை பயிரிடுதல் | • விதை உற்பத்திக்கான தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல் |
| 4. | உரப் பற்றாக்குறை | 1. பசுந்தாள் மற்றும் பசுந்தாள் தழை உரம் உற்பத்தி செய்தல்<br>2. அதிகமான கால்நடை வளர்தது தொழு உரத்தை அதிகளவில் உற்பத்தி செய்தல் | • ஊராட்சி அளவில் குப்பைகளை தரம் பிரித்து விவசாயத்திற்கு பயன் படுத்துதல்<br>• பசுந்தாள் உரப்பயிர்களை விதைகளை மாவட்டத்திற்கு ஏற்றவாறு பரிந்துரை செய்தல் | • மண் பரிசோதனை செய்து உரமிடுதல்<br>• நீண்டகால அடிப்படையில் ஒன்றியம் வாரியாக மண் ஆய்வுகூடம் அமைத்து விழிப்புணர்ச்சி மற்றும் பயிற்சி அளித்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | • தொழில்முனைவோருக்கு பயிற்சிகள் வழங்குதல் |
| 5. | வங்கி கடன் | 1. விவசாய அட்டை மூலம் கடன் கொடுக்க ஆவன செய்தல் | • வங்கி கடனை திருப்பி செலுத்துவதில் உழவர்கள் கவனம் செய்தல் | • வங்கிகள் உழவர்களை ஊக்கப்படுத்தி கவனம் செலுத்த செய்தல் |
| 6. | சேமிப்பு கிடங்கு இல்லை | 1. ஒவ்வொரு ஊராட்சிக்கும் சேமிப்பு கிடங்கு அமைத்தல் | • கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு அரசு கட்டுப்பாட்டில் அமைய வேண்டும் | • அரசு நிதி ஒதுக்கீடு செய்து சேமிப்பு கிடங்கு அமைக்க வேண்டும் |
| 7. | ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் | 1. ஆடு, மாடு, கோழி போன்ற அனைத்து வகையான கால்நடைகளையும் ஒரே இடத்தில் பராமரிக்க வேண்டும் | • தேர்வு செய்த நிலங்களை பயன்படுத்தி சரியான பராமரிப்பு இருக்க வேண்டும் | • அரசு மூலம் நீதி ஒதுக்கீடு செய்து 75 % நிதி உதவி செய்ய வேண்டும் <br> • ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றி பயிற்சி அளிக்க வேண்டும் |

குழு – 5 உறுப்பினா்களின் விபரம் :-

| | | |
|---|---|---|
| 1. | விஞ்ஞானி கள் : | முனைவா். சீனி. அன்புமணி<br>உதவிப் பேராசிரியா் (உழவியல்)<br>திரு.திருமூா்த்தி<br>முதுநிலை ஆராய்ச்சியாளா் |
| 2. | குழு பிரதநிதி : | திரு.பி.எம். சுப்பிரமணியன்<br>ஈரியூா், சின்னசேலம் ஒன்றியம் |
| 3. | உழவா்கள் : | 1. திரு.ஆா். லட்சுமணன்<br>மேல்மாவிளங்கை, ஒலக்கூா் ஒன்றியம்<br>2. திரு.இ.ஜெகநாதன்<br>பசுமலைத்தாங்கள், செஞ்சி ஒன்றியம்<br>3. திரு.எம்.லோகநாதன்<br>வடதொரசலூா், தியாகதுருகம் ஒன்றியம்<br>4. திரு.எஸ்.செந்தில்குமாா்<br>தொரவி, விக்கிரவாண்டி ஒன்றியம்<br>5. திரு.கே.பெரியண்ணன்<br>மூா்த்திப்பேட்டை, மரக்காணம் ஒன்றியம்<br>6. திரு. பி. பழனி<br>செண்டூா்,மைலம் ஒன்றியம்<br>7. திரு.மா.பழனி<br>ஒலக்கூா் ஒன்றியம்<br>8. திரு.பி.கங்காதரன்<br>கொடுக்கப்பட்டு, முகையூா் ஒன்றியம்<br>9. திரு. எஸ். செந்தில்<br>ரங்கநாதபுரம், வானூா் ஒன்றியம்<br>10. திரு.என்.எஸ். தண்டபாணி<br>பிடாகம், கோலியனூா் ஒன்றியம்<br>11. திரு.பி.எம். சுப்பிரமணியன்<br>ஈரியூா், சின்னசேலம் ஒன்றியம் |

**பலங்கள்**

1. பல்வேறு பயிா் வகைகள் சாகுபடி செய்வதற்கான தட்பவெப்ப நிலை மற்றும் மண் வளம் உள்ளது
2. நீா் ஆதார அமைப்புகள் மாவட்டத்தில் அதிகமாக உள்ளது
3. தோட்டக்கலை பயிா்கள் செய்ய தேவையான சூழல் மற்றும் சாலை வசதிகள் மலா், மரவள்ளி, மஞ்சள் மற்றும் கோலியஸ் உற்பத்திக்கேற்ற மாவட்டம்
4. அதிக கரும்பு ஆலைகள் உள்ளது
5. அதிக கறவை மாடுகள் உள்ளதால் நல்ல பால் உற்பத்தியுள்ளது
6. முழு நேர சிறு குறு விவசாயிகள் அதிக அளவில் உள்ள மாவட்டம்
7. அதிக நெல் உற்பத்தி மற்றும் அதனை நுகா்பொருளாக மாற்றும் அதிக அரிசி ஆலைகள் உள்ளது
8. அதிக சிறுதானிய உற்பத்தி உள்ள மாவட்டம்
9. மீன் உற்பத்திக்கு ஏற்ற வளம் உள்ள மாவட்டம்
10. பருத்தி மற்றும் விதை உற்பத்திக்கேற்ற மாவட்டம்
11. வேளாண்மை அறிவியல் நிலையம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், விதைப் பண்ணை மற்ற சகோதரத் துறைகளில் ஒருங்கிணைந்த திட்டமிடுதல் மற்றும் செயல்பாடுகள் ஆகியன உள்ள மாவட்டம்
12. ஆட்டு பண்ணை வளா்க்க ஏற்ற சூழ்நிலை மற்றம் மேய்ச்சல் நிலங்கள் உள்ள மாவட்டம்

**<u>பலவீனங்கள்</u>**

1. நீா் நிலைகள் மற்றும் வரத்து வாய்க்கால் ஆக்கிரமிப்பு
2. சந்தை விலையில் நிலையற்ற தன்மை
3. ஆட்கள் பற்றாகுறை மற்றும் கூலி உயா்வு
4. கடற்கரை மாவட்டம் என்பதால் புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் பாதிப்பு
5. வன விலங்குகளால் விளை நிலங்களில் பயிா் அழிவு
6. மின்சாரம் பற்றாகுறை
7. கடும் வறட்சிக் காலங்களில் கால்நடைகள் பாதிப்பு
8. போதிய கல்வியறிவு இல்லாமை காரணத்தால் வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணா்வு இல்லாமை மற்றும் திட்டங்களைப் பற்றித் தெரிந்துக்கொள்ளக்கூடிய ஆற்றல்
9. ஏழை உழவா்கள் அதிகம் உள்ள மாவட்டம் என்பதால் வேளாண்மையில் முதலீடு செய்ய முடிவதில்லை
10. பகலில் தடையில்லா மின்சாரம் இல்லாதது
11. முறையான பயிா் காப்பீட்டுத் திட்டம் உழவா்களுக்கு பயன்படுவதில்லை
12. விளை நிலங்கள் வீட்டு மனையாக மாறுவது

**<u>வாய்ப்புகள்</u>**

1. ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதின் மூலம் அதிக விளைச்சல் மற்றும் வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது
2. கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்து புதிய தொழில்நுட்பங்கள், புதிய ரகம், உரிய விலை கிடைக்க ஏற்பாடு செய்தல்
3. சின்ன சேலத்தில் ஆட்டுபண்ணையில் புதிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் கல்லூரி அமைக்க வாய்ப்பு உள்ளது
4. மானிய விலையில் மின் வேலி அமைத்து வன விலங்குகளினால் ஏற்படும் பயிா் சேதத்தினை தவிா்க்க வாய்புள்ளது
5. நவீன பண்ணை கருவிகள் மற்றும் இயந்திரங்கள் மூலம் ஆள் பற்றாகுறையை சமாளிப்பதற்கான வாய்ப்புகள்
6. காய்கறிகள் சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் ஏற்றமதிக்கான வாய்புகள்
7. இயற்கை உயிா் உரங்களை பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு வாய்ப்புகள்
8. காய்கறிகள் மற்றும் அனைத்து உணவு தானியப் பயிா்களை நேரடி கொள்முதல் செய்தல்
9. பாரம்பரிய பயிா்களுக்கு புவி சாா் குறியீடு வாங்குவதற்கான வாய்ப்புகள்
10. மீனவா்களுக்கு மானிய விலையில் டீசல் வழங்குவது போல் உழவா்களுக்கும் வழங்குதல்
11. மாவட்டத்தின் பிரதான தொழிலாக விவசாயம் இருப்பதாலும், வட மாவட்டத்தில் இதுவரை அரசு விவசாய கல்லூரி இல்லாததை கருத்தில் கொண்டு, புதிய வேளாண்மை கல்லூரி அமைக்க அதிக வாய்ப்பு உள்ளது

**<u>சவால்கள்</u>**

1. ஆக்கிரமப்பை அகற்றுவதில் சிக்கல்
2. புதிய நீா்நிலைகள் ஏற்படுத்துவதில் ஒற்றுமையின்மை
3. இயற்கை சீற்றங்களால் பாதிக்கும் மாவட்டம்
4. வனவிலங்குகளிடமிருந்து பயிா்களை பாதுகாப்பது சவாலாக உள்ளது
5. இடைத்தரகா்களால் காய்கறிகளின் விலை வீழ்ச்சி அடைகிறது
6. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தால் ஆட்கள் பற்றாக்குறை மற்றும் கூலி உயா்வு
7. நிலத்தடி நீரை சேமிப்பது கடினமாக உள்ளது
8. மின்சாரம் பற்றாக்குறை
9. வளங்குன்றா வேளாண்மை பின்பற்றுவது

**<u>வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு முனைதல்</u>**

| வ.எண் | வகைபடபடுத்தப்பட்ட பிரச்சனை | வாய்ப்புகள் | கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் | தீர்வுக்கு வேண்டிய தேவைகள் |
|---|---|---|---|---|
| 1. | குறைந்து வரும் நீர்வளம் | 1. தூர் வாருதல், தடுப்பணைகள் அமைப்பது, மழைநீர் சேகரிப்பு | • மக்கள் பங்கேற்பு, ஊராட்சி அமைப்பு மற்ற அறிவியல் சார்துறைகளுடன் இணைந்து செயல்படுதல் | • போதிய நிதி மற்றும் அரசு ஆணைகள் வழங்குதல் |
| 2. | குறைந்து வரும் நிலவளம் | 1. மண் பரிசோதனை, ஒருங்கிணைந்த பண்ணையம், வளங்குன்றா வேளாண்மை | • பயிர் கழிவு மறு சுழற்சி<br>• நவதானிய விதைப்பு, பசுந்தாள் உரம் | • வண்டல் மண் எடுக்க உழவர்களுக்கு அனுமதி<br>• மானிய விலையில் இயற்கை இடுபொருள்<br>• மண்வளம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் |
| 3. | **<u>பயிர் உற்பத்தியில்</u>**<br>1. தரமற்ற விதைகள்<br>2. விலை அதிகமுள்ள நீரில் கரையும் உரங்கள்<br>3. பூச்சி மற்றும் நோயினால் மகசூல் இழப்பு<br>4. வன விலங்குகளால் அச்சுறுத்தல் | 1. குழு முறையில் விதை உற்பத்தி<br>2. கூட்டுறவு வங்கிகள் மூலம் நீரில் கரையும் உரங்கள் வழங்குதல்<br>3. வளங்குன்றா வேளாண்மை முறையில் உயிரியல் முறைப் பூச்சி மற்றும் நோய்க்கட்டுப்பாடு மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு<br>4. சோலார் மின் வேலி | • பயிற்சிகள்<br>• அனைத்து நிறுவன உரங்கள் கிடைக்க வழிவகை செய்தல்<br>• தரம் மற்றும் சரியான கையிறுப்பு<br>• வனவிலங்கு தாக்குதலுக்கு உழவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் | • ஊக்க தொகை மூலம் விதைப் பெருக்கம்<br>• அரசு மானியம் வழங்குதல்<br>• இயற்கை வழி ஆய்வகம் மற்றும் பயிற்சி வகுப்புகள்<br>• அரசின் முழு மானியத் துடன் வேலி அமைப்பது |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | **<u>கால்நடை வளர்ப்பு</u>**<br>1. கலப்பின வகைகளுக்கு தட்டுபாடு<br>2. மேய்ச்சல் மற்றும் தீவன கட்டுப்பாடு<br>3. போதிய மருத்துவ வசதியின்மை | 1. உயர்ரக கலப்பின ஆடு, மாடு மற்றும் கோழி<br>2. தீவன உற்பத்தி<br>3. கால்நடை மருத்துவமனைகள் | • காப்பீடு மற்றும் மருத்துவ வசதி<br>• குழு முறை ஒத்துழைப்பு | • கடன் மற்றும் மானியம், பயிற்சி அளித்தல், தீவன உற்பத்தியை ஊக்கு வித்தல் |
| 5. | இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு | 1. கலப்பு பண்ணையம் மறறும் மரம் வளர்ப்பு | • விற்பனை வாய்ப்பு மற்றும் காப்பீடு | • பயிற்சிகள், மாதிரி திடல், கட்டாய காப்பீடு விழிப்புணர்வு மற்றும் துல்லிய வானிலை அறிக்கை தகவல்கள் |
| 6. | காய்கறி சேமிப்பிற்கான குளிரூட்டப்பட்ட கிடங்குகள் மற்றும் கொள்முதல் நிலையங்கள் | 1. ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் காய்கறி சிறப்பு பொருளாதார மண்டலம் | • சேமிப்பு கிடங்குகளை நேரடியாக விவசாயிகள் மறறும் உழவர் மன்றம் மூலம் கையாளுதல் | • காய்கறி ஏற்றுமதி செய்ய அரசு வழிவகை செய்ய வேண்டும் |
| 7. | வங்கிக் கடன்கள் பெறுவதில் சிரமம் | 1. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் 4% சதவித பயிர்கடன் கொடுக்க ஏற்பாடு | • எளிய நடைமுறையினை பின்பற்றுதல் | • உரிய தருணத்தில் கடன் பெற ஏற்பாடு செய்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | பருவநிலை மாற்ற தகவல் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்குதல் | 1. வட்டார அளவில் தகவல் மையம் அமைத்து ஊராட்சி மூலம் தெரிவித்தல் | • உழவர்மன்ற பிரதிநிதி பங்கேற்பு | • கணிணி மூலம் தகவல் தொழில்நுட்பம் ஒருங்கிணைப்பு |
| 9. | பல்துறைத் திட்டங்கள் பற்றிய தெளிவின்மை | 1. தினசரி நாளிதழ், வானொலி, தொலைக்காட்சி, வேளாண்துறை இணையதளம் போன்றவற்றில் திட்டங்களை விளம்பரம் செய்தல் | • அனைத்து திட்டங்களும் அனைத்து உழவர்களுக்கும் சென்றடைய வேண்டும் | • வேளாண்மை துறைக்கு அரசு அதிக நிதி ஆதாரம் ஒதுக்க வேண்டும் |

# இணைப்பு-1

**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்**

TNAU

**நாள் : 31.07.2013 (புதன்கிழமை)**
இடம் : வேளாண்மை அறிவியல் நிலைய கருத்தரங்கு கூடம்

# வேளாண்மையில் நிகழ் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகள் -குழு கலந்தாய்வு

## ---: நிகழ்ச்சி நிரல்:---

*நேரம் : காலை 9.30 மணி*

| | | |
|---|---|---|
| 09.00 -09.30 மணி | : | வருகைப் பதிவு |
| 09.30 -10.00 மணி | : | கருத்துக்காட்சி பார்வையிடல் |
| | | **துவக்க நிகழ்ச்சி** |
| 10.00 மணி | : | ***தமிழ்த்தாய் வாழ்த்து*** |
| 10.05 மணி | : | ***வரவேற்புரை***<br>**முனைவர்.க.நடராஜன்**<br>தொழில் நுட்ப வல்லுநர் (விதை நுட்பவியல்)<br>வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம் |
| 10.10 மணி | : | ***கலந்தாய்வின் நோக்கம் மற்றும் உள்ளடக்கம்***<br>**முனைவர்.ந.சாத்தையா**<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம் |
| 10.15 -10.45 மணி | : | ***சிறப்புரை***<br>**திரு.கே.இரவீந்திரன்**<br>வேளாண்மை உதவி இயக்குநர்<br>வல்லம், விழுப்புரம் மாவட்டம்<br>**திரு.கே.இராசு**<br>துணை இயக்குநர் (தோட்டக்கலை)<br>விழுப்புரம் மாவட்டம்<br>**திரு.என்.விக்ரமன்**<br>உதவிப் பொது மேலாளர் (நபார்டு)<br>விழுப்புரம் மாவட்டம்<br>**முனைவர்.ஆர்.வைத்தியநாதன்**<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம்<br>திண்டிவனம் |
| | : | ***தலைமை உரை மற்றும் நிகழ்ச்சி துவக்கி வைத்தல்***<br>திரு.ஆ. இரத்தினசபாபதி<br>வேளாண்மை இணை இயக்குநர்<br>விழுப்புரம் மாவட்டம் |

10.45 மணி : ***தொழில்நுட்ப அமர்வு பற்றிய விளக்கம்***
**முனைவர்.ந.சாத்தையா**
பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை அறிவியல் நிலையம்,
திண்டிவனம்

10.50-11.00 மணி : **தேநீர் இடைவேளை**

**தொழில்நுட்ப நிகழ்ச்சி -1**

11.00 – 11.30 மணி : ***குழுக்கூட்டத்தின் பங்கேற்பு உழவர்கள் பற்றிய விபரங்கள் சேகரிப்பு***

குழு 1 : முனைவர். மு. ரேணுகா
தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
திரு. எ.ஆறுமுகம், (இளநிலை ஆராய்ச்சியாளர்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 2 : முனைவர். கு.கவிதா
தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் நோயியல்)
திரு. வி. வீராசாமி (முதுநிலை ஆராய்ச்சியாளர்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 3: முனைவர். கா.செந்தமிழ்
தொழில் நுட்ப வல்லுநர் (நூற்புழுவியல்)
செல்வி. கு. எழிலரசி (இளநிலை ஆராய்ச்சியாளர்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 4: முனைவர்.க.நடராஜன்
தொழில் நுட்ப வல்லுநர் (விதை நுட்பவியல்)
திருமதி . ஆ.விஜயலெட்சுமி, திட்ட உதவியாளர் (க)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

**தொழில் நுட்ப நிகழ்ச்சி -2**

11.30-12.30 மணி : ***விழுப்புரம் மாவட்ட வேளாண்மை மற்றும் வேளாண் சார் தொழில்களின் பலம், பலவீனம், வாய்ப்பு, சவால்கள் பற்றிய கலந்தாய்வு***

**அமர்வின் நோக்கம் :**

1. நிகழ்காலத்தில் உழவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல்
2. பிரச்சினைகளை இனம் கண்டு வகைப்படுத்துதல்
3. வேளாண்மையைச் செம்மையாக்குவதற்கு உள்ள வாய்ப்புகளைப் பட்டியலிடுதல்
4. எதிர்காலத்தில் சந்திக்கவுள்ள சவால்களை இனம் காணுதல்
5. தீர்வுகளை அடையாளம் காணுதல்

<u>SWOC ஆய்வு பற்றிய விபரப் பட்டியல்</u>

- கண்டறியப்பட்ட பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள், சவால்கள்

குழு 1 : முனைவர். மு. ரேணுகா
தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
திரு. எ.ஆறுமுகம், (இளநிலை ஆராய்ச்சியாளர்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 2 : முனைவர். கு.கவிதா

தொழில் நுட்ப வல்லுநா் (பயிா் நோயியல்)
திரு. வி. வீராசாமி (முதுநிலை ஆராய்ச்சியாளா்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 3: முனைவா். கா.செந்தமிழ்
தொழில் நுட்ப வல்லுநா் (நூற்புழுவியல்)
செல்வி. கு. எழிலரசி (இளநிலை ஆராய்ச்சியாளா்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 4: முனைவா்.க.நடராஜன்
தொழில் நுட்ப வல்லுநா் (விதை நுட்பவியல்)
திருமதி . ஆ.விஜயலெட்சுமி, திட்ட உதவியாளா் (க)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

**தொழில்நுட்ப நிகழ்ச்சி –3**

12.30-1.45 மணி : ***வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு தீா்வு முனைதல் (வேளாண் முன்னேற்றத்தில் நிகழ்கின்ற உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் இடைவெளியைக் குறைக்கத் தேவையான புலம்வாரியான தலையீடுகள் மற்றும் அணுகுமுறைகள்)***

நோக்கம் :

1) அடையாளம் காணப்பட்ட, மேலும் வகைப்படுத்தப்பட்ட அடிப்படை காரணங்களைத் தொகுத்தல்
2) பிரச்சினைகளை முக்கியத்துவ அடிப்படையில் பட்டியலிட்டு தரவரிசைப்படுத்துதல்
3) யதாா்த்தமான வாய்ப்புகளை அறிந்து கொள்ளுதல்
4) தீா்வுகளைக் குறிப்பிட்டு அதற்கு உண்டான தேவைகள் மற்றும் வேண்டிய காரியங்கள் பற்றிய விபரங்கள் அளித்தல்

விபரப்பட்டியல் :

1) வகைப்படுத்தப்பட்ட பிரச்சினையின் தலைப்பு:-
2) பிரச்சினையினால் ஏற்படும் உற்பத்தி இழப்பு / பாதிப்பு:-
3) பிரச்சினையின் தன்மை (நிகழ்பிரச்சினை / எதிா்காலப்பிரச்சினை) மற்றும் காரணங்கள்
4) பிரச்சினை கண்டறியப்பட்ட மாவட்ட பகுதிகள் ,:-
5) பிற விபரங்கள் :-

பட்டியலிடப்பட்ட விபரங்கள்

| வ.எண். | வகைப்படுத்தப்பட்ட பிரச்சினை | வாய்ப்புகள் | கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் | தீா்வுக்கு வேண்டிய தேவைகள் |
|---|---|---|---|---|
| | | | | |

குழு 1 : முனைவா். மு. ரேணுகா
தொழில் நுட்ப வல்லுநா் (தோட்டக்கலை)
திரு. எ.ஆறுமுகம், (இளநிலை ஆராய்ச்சியாளா்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 2 : முனைவா்.கு.கவிதா
தொழில் நுட்ப வல்லுநா் (பயிா் நோயியல்)
திரு. வி. வீராசாமி (முதுநிலை ஆராய்ச்சியாளா்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 3: முனைவா். கா.செந்தமிழ்
தொழில் நுட்ப வல்லுநா் (நூற்புழுவியல்)

செல்வி. கு. எழிலரசி (இளநிலை ஆராய்ச்சியாளர்)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

குழு 4: முனைவர்.க.நடராஜன்
தொழில் நுட்ப வல்லுநர் (விதை நுட்பவியல்)
திருமதி . ஆ.விஜயலெட்சுமி, திட்ட உதவியாளர் (க)
வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

1.45-2.15 மணி : ***உணவு இடைவேளை***

2.15-3.15 மணி : ***வேளாண்மையில் கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு முனைதல்- கலந்துரையாடல்***

**தொழில்நுட்ப நிகழ்ச்சி -4**

3.15-4.15 மணி : ***சிறப்பு பட்டறை***

1) பருவநிலை மாற்றம், இடர்பாடுகள், ஏற்புடைய வேளாண் மாற்றம்
2) நிலம் மற்றும் பகுதிசார் வளத்திற்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணையம்
3) பாரம்பரிய இரகங்களையும் முறைகளையும் முன்னிறுத்துதல்
4) இயற்கை வள வேளாண்மை முறைகளில் தேவையான கவனம்
5) அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல், உழவர்களது வணிக ஆளுமையை மேம்படுத்துதல்
6) இளைஞர்களை வேளாண்மையில் முன்னிறுத்துதல்
7) வேளாண் விரிவாக்கத்தில் தகுதித் திறன் மற்றும் தேர்ச்சித்திறன் வளர்ப்பு
8) வேளாண்மையில் புதுமைகளைக் கையாளுதல் மற்றும் கிராமப்புற கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவித்தல்
9) புவிசார் குறியீடுகள், பாரம்பரிய இரகங்கள் காப்பாளர்கள் பற்றிய விழிப்புணர்வு
10) வெற்றிப்பாதையில் செல்பவர்களை இனம் காணுதல்

**தொழில் நுட்ப நிகழ்ச்சி -5**

4.15- 4.50 மணி : ***நிறைவு அமர்வு***

1) நிகழ்ச்சிகளின் சுருக்கவுரை
   முனைவர்.க.நடராஜன்
   தொழில் நுட்ப வல்லுநர் (விதை நுட்பவியல்)
   வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்
2) உழவர்களது கருத்துக்கள் (3 நபர்கள்)
3) இறுதி வடிவாக்கம் மற்றும் நிறைவுரை
   முனைவர். ந.சாத்தையா
   பேராசிரியர் மற்றும் தலைவர்
   வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம்

4.50 மணி : ***நன்றி நவிலல்***
முனைவர். மு. ரேணுகா
தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
வேளாண்மை அறிவியல் நிலையம்
திண்டிவனம்

4.55 மணி : ***நாட்டுப்பண்***

******

## Brainstorming Session- Photo Documentation

Introductory Remarks by the Professor and Head, Krishi Vigyan Kendra, Villupuram District



Inauguration of the Programme by the Joint Director of Agriculture, Villupuram District



## Special Addresses



Professor and Head, ORS, Tindivanam



Assistant Director of Agriculture, Marakkanam

## Programme Briefing



Professor and Head, KVK, Tindivanam



DDM, NABARD, Villupuram Dt

## Group Exercises




## Group Exercises




## Group Exercises




## Group Exercises




## Plenary Session-Views Recognized



## Plenary Session



*****